| A–8510 | Sub. Code 4BLT1C2 |
|---|---|

**B.Lit DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**First Semester**

தமிழ்

**இலக்கணம் நன்னூல் (எழுத்து) இலக்கணம் யாப்பு**

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours                                        Maximum : 75 Marks

**பகுதி அ**                    (10 × 2 = 20)

**பின்வரும்** வினாக்களுக்கு ஒரிரு தொடர்களில் விடை தருக.

1. பாயிரத்தின் வேறுபெயர்களை எடுத்துரைக்க.

2. எழுத்திலக்கணத்தின் பாகுபாட்டினைக் குறிப்பிடுக.

3. தற்சமம் என்றால் என்ன?

4. தொகைநிலைத் தொடர்களைக் குறிப்பிடுக.

5. ‘உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’ – எடுத்துக்காட்டுடன் விளக்குக.

6. சாரியை என்றால் என்ன?

7. ‘நிழற்சீர்’ – விளக்குக.

8. தொடையின் வகைகளைக் குறிப்பிடுக.

9. நான்கு பாக்களுக்குரிய ஓசைகள் யாவை?

10. ஆசிரியப்பாவின் இனங்களைக் குறிப்பிடுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**பின்வரும்** வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை எழுதுக.

11. (அ) நூலில் இடம்பெறக் கூடாத பத்துக்குற்றங்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) போலி என்றால் என்ன? எத்தனை வகைப்படும்? விவரிக்க.

12. (அ) ஓரெழுத்து ஒருமொழி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) திசைப்பெயர்ப் புணர்ச்சியின் இலக்கணம் கூறி விளக்குக.

13. (அ) னகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சியை விளக்குக.

(அல்லது)

(ஆ) உருபுகள் நாற்பதாவதை உருபியல் வழி விளக்குக.

14. (அ) தளையின் இலக்கணம் கூறி வகைகளை சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) தொடை விகற்பம் விளக்குக.

15. (அ) ஆசிரியத் தாழிசை, துறை, விருத்தம் - விளக்குக.

(அல்லது)

(ஆ) கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம் - விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

**பின்வரும்** வினாக்களுள் **மூன்றனுக்குத்** கட்டுரை வடிவில் விடை எழுதுக.

16. நன்னூலார் கூறும் மாணாக்கர் பற்றி விவரித்தெழுதுக.

17. குற்றியலுகர எண்ணுப்பெயர்ப் புணர்ச்சியின் இலக்கணம் கூறி விவரிக்க.

18. உருபியல் கூறும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

19. அசைக்கு உறுப்பாகும் எழுத்துகள் குறித்து விவரிக்க.

20. ஆசிரியப்பாவின் இலக்கணம் கூறி, வகைகளை விளக்குக.

———————

wk ser

| A–8511 |
|---|

| Sub. Code |
|---|
| 4BLT2S2 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Second Semester**

தமிழ்

திருக்குறள் – அறத்துப்பால்

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு தொடர்களில் விடை தருக.

1. “எடுப்பதூஉம் எல்லாம் மழை” – விளக்கம் தருக.

2. “சான்றோன் எனக் கேட்ட தாயின் மகிழ்வைப்” புலப்படுத்துக.

3. நோக்கம் குழையும் விருந்து எது கூறுக?

4. பெண்ணின் பெருந்தக்க யாவுள?

5. “தகுதியான் வென்று விடல்” – விளக்குக.

6. ஒப்புரவினால் கிடைக்கும் பயன்பாடு பற்றி எழுதுக.

7. ஈகையது இலக்கணம் யாது?

8. “வாய்மை” – விளக்கம் தருக.

9. வெகுளாமைக்கு இடம் யாது?

10. அகத்தூய்மை என்றால் என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) மகான்களில் பெருமைகள் யாவை?

(அல்லது)

(ஆ) இல்லாளின் பெருமைகளை எடுத்துரைக்க.

12. (அ) அன்பினது சிறப்பு குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) ஒழுக்கத்தின் உயர்வுகளைத் தொகுத்துரைக்க.

13. (அ) அழுக்காறாமையின் நெறிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஈகைப் பண்பின் தன்மையை வள்ளுவர் எங்ஙனம் எடுத்துரைக்கிறார்?

14. (அ) புகழ் உடையாரின் மேன்மைகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) "புலால் மறுத்தல்" – விளக்குக.

15. (அ) நிலையாமையின் நிலைத்த தன்மைகள் யாவை?

(அல்லது)

(ஆ) ஊழின் வலிமை – விளக்கி எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. இல்வாழ்க்கையின் மேன்மைகளைத் தொகுத்துரைக்க.

17. அடக்கமுடைமையின் அவசியத்தை வள்ளுவர் எங்ஙனம் விவரிக்கிறார்?

18. பிறனில் விழைவானின் குற்றங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

19. கள்ளாமையின் நிலைப்பாட்டை வள்ளுவர் வழியில் கட்டுரைக்க.

20. அவாவை அறுத்தவன் அடைகின்ற நன்மைகளை விளக்கி வரைக.

———————

**A–8512**

**Sub. Code**
**4BLT2C1**

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Second Semester**

தமிழ்

அற இலக்கியம்

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில்/தொடரில் விளக்கம் தருக.

1. வறுமையில் வாடுபவர்கள் இழப்பது எவை?

2. மானமுடைய நன்மக்கள் எதனை மறப்பர்?

3. எக்குதிரையில் ஏறிச் செல்லுதல் துன்பத்தை உண்டாக்கும்?

4. யாருடைய மனம் சோம்பி இருத்தல் துன்பத்தைக் கொடுக்கும்?

5. மனையாலில்லாத மனை எவ்வாறு இருக்கும்?

6. 'ஒன்னாரைத் தேறேல்' – விளக்கம் தருக.

7. நறுந்தொகை என அழைக்கப்படும் நூல் எது?

8. எளியவர்க்குச் சிறப்பு எது?

9. போகாத இடந்தனிலே போக வேண்டாம் – எனக் கூறியவர் யார்?

10. தனி ஒருவனாக ஏன் பயணம் செய்யக் கூடாது?

பகுதி ஆ (5 × 5 = 25)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பிறருக்கு எவ்வித பொருளும் ஈயாயதால் ஏற்படும் விளைவினை நாலடியார் மூலம் எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) வாழ்வியல் நிலையினை நாலடியார் கூறும் கருத்துக்களில் புலப்படுத்துக.

12. (அ) இன்னா செயல்கள் சிலவற்றைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சிறையில்லா பாடல் கூறும் கருத்தினைத் தெளிவுபடுத்துக.

13. (அ) ஔவையார் வழங்கிய அறநூல் குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) ஊழின் வலிமையை ஔவையார் வழி தொகுத்துரைக்க.

14. (அ) குற்றங்களை நீக்கிக் கொள்பவர்களின் வாழ்க்கைக் குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) பேச்சு என்ற சொல்லால் வெற்றிவேற்கை கூறும் அறங்களை எடுத்துரைக்க.

15. (அ) உலக நீதியின் சிறப்பினைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தனிமனித வாழ்க்கைக்கு உயர்வு பெற உலக நாதர் கூறும் கருத்துக்களை எடுத்துரைக்க.

**பகுதி இ** (3 × 10 = 30)

பின்வரும் வினாக்களில் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் கட்டுரை வடிவில் விடை தருக.

16. பொருள் இல்லாதவர்களுக்கு ஏற்படும் துன்பத்தை நாலடியார் வழி ஆய்க.

17. வாழ்வின் இன்னாதவனவற்றை இன்னா நாற்பது மூலம் விரித்துரைக்க.

18. ஔவையார் கூறும் சிறப்பான நீதிகளை ஆத்திசூடி கொண்டுத் தொகுத்துரைக்க.

19. அரசியல் ஆட்சிமுறை நீதிகள் பற்றி வெற்றிவேற்கை கொண்டு விளக்குக.

20. உலக நீதி கூறும் அறக்கருத்துக்களை விரிவாக கட்டுரைக்க.

———————

**A–8513**

**Sub. Code**
**4BLT2C2**

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Second Semester**

தமிழ்

இலக்கணம் நன்னூல் (சொல்லும் அணியும்)

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours                    Maximum : 75 Marks

பகுதி அ                    (10 × 2 = 20)

பின்வரும் **அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு தொடர்களில்** விடை தருக.

1. மூவகை மொழிகள் யாவை?

2. வினைமுற்று என்றால் என்ன?

3. ஆற்றுநீர்ப் பொருள்கோள் - விளக்கம் தருக.

4. தொகை நிலைத் தொடர் வகைகள் யாவை?

5. ‘தில்’ என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் யாவை?

6. உயிர் அல்லாத பொருள்கள் யாவை?

7. உவமை அணி என்றால் என்ன?

8. ‘கௌட நெறி’ எத்தகையது?

9. ‘முற்றுருவகம்’ என்பது யாது?

10. ‘பாவிகம்’ என்றால் என்ன?

**பகுதி ஆ** (5 × 5 = 25)

பின்வரும் **அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) வழக்கு எத்தனை வகைப்படும்? விளக்குக.

(அல்லது)

(ஆ) வினையெச்சத்தின் இலக்கணம் தந்து விவரிக்க.

12. (அ) பண்புத்தொகை, உம்மைத் தொகையைச் சான்று தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) வழுவமைதி குறித்து நன்னூலார் கூறுவன யாவை?

13. (அ) இடைச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள் யாவை?

(அல்லது)

(ஆ) உயிர்ப் பொருள்களின் வகைகள் ஐந்து - விளக்குக.

14. (அ) வேற்றுப் பொருள் வைப்பு அணி பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.

15. (அ) சிலேடை அணியைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) வாழ்த்து அணி- விளக்குக.

**பகுதி இ** (3 × 10 = 30)

பின்வரும் வினாக்களுள் **மூன்றனுக்கு** மட்டும் **கட்டுரை** வடிவில் விடை தருக.

16. உயர்திணை ஆண்பாற் பெயர்களை விவரிக்க.

17. வினா, விடைகள் குறித்து நன்னூலார் கூறுவனவற்றைக் கட்டுரைக்க.

18. 'உரியியல்' செய்திகளைத் தொகுத்துரைக்க.

19. அதிசய அணி, நுட்ப அணி - விளக்குக.

20. நிரல்நிறை அணி, பாவிக அணிகள் குறித்துக் கட்டுரை வரைக.

———————

**A–8515**

| Sub. Code |
|---|
| 4BLT3S2 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Third Semester**

தமிழ்

**திருக்குறள் – பொருட்பால்**

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு தொடரில் விடை தருக.

1. வகுத்தலும் வல்லதரசு விளக்கி எழுதுக?

2. கண்ணுடையார் யார்? கல்லாதவர் நிலை என்ன?

3. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை என்னவாகும்?

4. அறிவுடையார், அறிவில்லாதார் இயல்பினை விளக்குக?

5. திறனறிந்து தேர்ந்து கொளல் யாரை?

6. எண்ணித் துணிவது எவ்வாறு-விளக்குக?

7. வீரத்தின் தோல்வியாகக் கருதப்படுவது எது?

8. பழிக்கு அஞ்சுபவர்கள் யார்?

9. கல்லாதவரும் நனிநல்லார் எப்பொழுது?

10. தூதனுக்கு வேண்டிய பண்புகள் யாவை?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) அரசின் பண்புகளாக 'இறைமாட்சி' குறிப்பிடுவனவற்றை விவரிக்க?

(அல்லது)

(ஆ) 'சிற்றினம் சேராமை' அதிகாரம் கூறும் நீதி யாது?

12. (அ) 'தெரிந்து வினையாடல்' அதிகாரம் கூறும் ஆளுமைத்திறம் குறித்து எழுதுக?

(அல்லது)

(ஆ) தன் வலி அறியாமையால் ஏற்படும் அவலங்களை எழுதுக?

13. (அ) கொடுங்கோன்மையால் ஏற்படும் விளைவுகள் யாவை?

(அல்லது)

(ஆ) 'சுற்றம் தழால்' அதிகாரம் குறிப்பிடுவன யாவை?

14. (அ) 'கண்ணோட்டம்' குறித்து வள்ளுவர் குறிப்பிடுவனவற்றைத் தொகுத்துரை.

(அல்லது)

(ஆ) அவையறிந்து பேசுவதால் ஏற்படும் பயன் யாது?விளக்குக?

15. (அ) 'ஒற்றர்களின்' முக்கியத்துவம் பற்றி வள்ளுவர் கூறியவற்றை விளக்கி எழுதுக?

(அல்லது)

(ஆ) ஊக்கமுடைமையின் உயர்நிலைக் குறித்து எழுதுக?

## பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. வினைத்தூய்மையின் சிறப்புகளை ஆராய்க?

17. பெரியாரைத் துணைக் கோடலின் அவசியத்தைத் தொகுத்துரைக்க?

18. 'துன்பத்தைத் தாங்கு' என வள்ளுவர் கூறும் நீதியினை விவரிக்க?

19. 'சொல்வன்மை' அதிகாரம் கூறும் பொருளுணர்ந்து பேசுதலின் பயன்களைக் கட்டுரை வடிவில் தருக?

20. 'குறிப்பறிதல்' எனும் அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள செய்திகளைத் தொகுத்துரைக்க?

———————

Ws9

**A–8516**

| Sub. Code |
| --- |
| 4BLT3C1 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Third Semester**

தமிழ்

சமய இலக்கியம்

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

பின்வரும் வினாக்களுக்கு **ஓரிரு** தொடர்களில் விடை தருக.

1. சுந்தர மூர்த்தி சுவாமிகள் புண்ணியனார் என்று யாரைக் கூறுகின்றார்?

2. திருப்பூவணத் தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் பெயர் என்ன?

3. திருப்பள்ளி எழுச்சியைப் பாடியவர் யார்?

4. திருப்பள்ளி எழுச்சிப் பாடப்பட்ட இடம் எது?

5. இராமாவதாரத்தின் மீது ஈடுபாடுகொண்ட ஆழ்வார் யார்?

6. காயாம்பூ மாலையின் நிறத்தினை ஒத்திருப்பவன் யார்?

7. திரு.வி.க. எழுதிய நூலின் பெயர் என்ன?

8. இயேசுவின் சீடர்கள் எத்தனை பேர்?

9. குணங்குடி மஸ்தான் சாகிவின் பெற்றோர் பெயர்களைக் குறிப்பிடுக.

10. "தேடக்கிடையாத திரவியமே தேன்கடலே" என்று புகழப்படுபவர் யார்?

**பகுதி ஆ** (5 × 5 = 25)

பின்வரும் **அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) திருப்பூவணத் தலத்தின் சிறப்புகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சுந்தரமூர்த்தி நாயனார் கூறும் திருப்பூவணநாதரின் பெருமைகளை எடுத்துரைக்க.

12. (அ) திருஉத்திர கோசமங்கையில் எழுந்தருளியிருக்கும் இறைவனின் சிறப்புகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் இறைவனின் பெருமைகளை விவரிக்க.

13. (அ) குலசேகர ஆழ்வாரின் பக்தி திறத்தினை 'பெருமாள் திருமொழி' வழிநின்று விளக்குக.

(அல்லது)

(ஆ) வித்துவக் கோட்டு இறைவன் மீதான பக்திச் சிறப்பினை விவரிக்க.

14. (அ) அறத்தின் இயல்புகளாக இயேசு கிறிஸ்து கூறும் செய்திகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) இயேசுவின் பெருமைகளாக திரு.வி.க. கூறும் கருத்துக்களை தொகுத்து கூறுக.

15. (அ) குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்களில் இடம்பெற்றுள்ள நிலையாமைக் கருத்துக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) அல்லாவின் பெருமைகளைக் கூறுக.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் **கட்டுரை வடிவில்** விடை தருக.

16. திருப்பூவண நாதரின் பெருமைகளை சுந்தர மூர்த்தி நாயனார் வழிநின்று விளக்குக.

17. இறைவனின் அருட்சிறப்பினை திருப்பள்ளி எழுச்சி வாயிலாக விவரிக்க.

18. ‘பெருமாள் திருமொழியில்’ இடம் பெற்றுள்ள கருத்துகளை எடுத்துரைக்க.

19. உலகெலாம் உய்ய இயேசு கூறிய செய்திகளை ‘கிறிஸ்துவின் அருள்வேட்டல்’ வழி எடுத்துரைக்க?

20. பிறவித்துயரிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறைகளாக குணங்குடி மஸ்தான் சாகிபு கூறும் கருத்துக்களை விவரிக்க.

———————

WS8

**A–8517**

| Sub. Code |
| --- |
| 4BLT3C2 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Third Semester**

தமிழ்

இலக்கணம் (அகமும் புறமும்)

**(CBCS – 2014 onwards)**

Time : Three Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு** தொடரில் விடையளி.

1. பகற்குறி என்றால் என்ன?

2. தூது பிரிவிற்குரியவர் யார்? கால அளவு எவ்வளவு?

3. விரிச்சி – விளக்கம் தருக?

4. வஞ்சிப் பூச் சூடிய மன்னன் பகைநாட்டின் மீது படையெடுப்பது எத்திணை?

5. எண் வகை மணங்கள் யாவை?

6. ‘களவு’ என்றால் என்ன?

7. அழிபடை தாங்கல் என்பது என்ன?

8. பேராண் முல்லைத் துறையை விளக்குக?

9. பாடாண் திணை உணர்த்தும் இரண்டு செய்திகளைக் கூறுக?

10. பரிசிலர்கள் யாவர்?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடையளி.

11. (அ) அகப்பொருள் இலக்கணம் கூறும் பொருள் பாகுபாட்டினை விவரி?

(அல்லது)

(ஆ) அறத்தொடு நிலையின் வகைகளை விளக்குக?

12. (அ) இயற்கைப் புணர்ச்சி நிகழும் முறையினை எடுத்துரைக்க?

(அல்லது)

(ஆ) மடல் கூற்று, மடல் விலக்கு என்பதன் விளக்கம் தருக?

13. (அ) பாதீடு, உண்டாட்டுத் துறைகளை விளக்குக?

(அல்லது)

(ஆ) மாராய வஞ்சி, நெடுமொழி வஞ்சித் துறைகள் உணர்த்தும் செய்திகள் யாவை?

14. (அ) தும்பைத் திணையின் போர்க்கள நிகழ்ச்சிகளை விவரி?

(அல்லது)

(ஆ) அரச வாகை, அரச முல்லை – விளக்குக?

15. (அ) பாடாண் திணை உணர்த்தும் ஆற்றுப்படைச் செய்திகள் யாவை?

(அல்லது)

(ஆ) அகத்திணைக் குறித்துப் பாடாண் திணையில் கூறப்படுவன யாவை?

பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும் மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஐந்திணைகளுக்குரிய முதல், கரு, உரிப்பொருள்களைப் பட்டியலிடுக?

17. களவில் நிகழும் பிரிவு வகைகளை விளக்குக?

18. வெட்சிப் படலத்தின் சிறப்பினைக் கட்டுரை வடிவில் தருக?

19. நொச்சிப் படலத்தை விளக்கி அதன் துறைகளை விளக்குக?

20. பாடண் திணை உணர்த்தும் சமுதாய நிலையை எடுத்துரைக்க?

---

**A–8519**

| Sub. Code |
|---|
| 4BLT1A1 |

## B.Lit DEGREE EXAMINATION, NOVEMBER 2019

தமிழ்

## இயைபுப்பாடம்–தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும்

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் வரிகளில் விடை தருக.

1. புதிய கற்கால மக்களிடம் காணப்பட்ட புதுமைகள் இரண்டினை எழுதுக.

2. குமரிக் கண்டம் குறித்து எழுதுக.

3. பல்லவர்களின் நாட்டுப் பிரிவுப் பகுப்புகள் யாவை?

4. பல்லவர் கால சமயக் கொடுந்தண்டனைகளை எழுதுக.

5. சோழர்களின் ஊர் அவைகள் யாவை?

6. சோழர்காலச் சமய அடியார்களின் பிரிவு வகை யாவை?

7. தமிழக வரலாற்றில் மிக மேம்பட்ட காலங்கள் எனக் குறிப்பிடப்படுபவை யாவை?

8. நாயக்கர்களின் கட்டிடக்கலை படைப்பிற்குரிய இடங்களைக் குறிப்பிடுக.

9. தமிழகத்தை வாணிகத் தளமாகக்கொண்ட ஐரோப்பியர்கள் யாவர்?

10. தமிழக விடுதலைப் போரில் பங்குபெற்றவர்களைக் குறிப்பிடுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) வரலாற்றிற்கு முற்பட்ட காலம் பற்றி குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) சங்ககால போர் முறையினைத் தொகுத்துரைக்க.

12. (அ) இருண்டகாலத் தமிழகத்தின் நிலையினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பல்லவர் ஆட்சி முறையினைத் தொகுத்துரைக்க.

13. (அ) சோழர்கால கோயில்களில் நடைபெற்ற பணிகளைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) தமிழகத்தில் முஸ்லீம் ஆதிக்கம் பற்றி எடுத்துரைக்க.

14. (அ) நாயக்கர் கால அரசியல் நிலையினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பாளையப்பட்டு ஆட்சி முறையின் விளைவுகளைச் சுட்டுக.

15. (அ) விடுதலைப் போரில் காந்தியடிகள் காலத்தில் தமிழகத்தின் பங்களிப்பை விவரி.

(அல்லது)

(ஆ) விடுதலைக்குப் பின்னர் உற்பத்தித் துறையின் வளர்ச்சியினைத் தொகுத்துரைக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. சங்ககால அரசியல் முறையினை விரித்துரைக்க.

17. பல்லவர்கால சமய நிலையினைத் தொகுத்தெழுதுக.

18. சோழர்கால ஊராட்சி அமைப்பு முறையினை மதிப்பிடுக.

19. நாயக்கர் வளர்த்த கலைகள் பற்றி விரித்துரைக்க.

20. விடுதலைக்குப் பின்னர் தமிழக அறிவுத்துறை வளர்ச்சியினைத் தொகுத்துரைக்க.

———————

**A–8521**

| Sub. Code |
|---|
| 4BLT2A3 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

தமிழ்

இயைபுப் பாடம் – தமிழ் இலக்கண வரலாறு

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு தொடர்களில் விடை தருக.

1. தொல்காப்பியத்தில் கூறப்படாத வினையெச்சங்கள் யாது?

2. புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் யார்?

3. வீரச் சோழியத்தின் ஆசிரியர் யார்?

4. காடும் செடியும் என்னோ தமிழ்க் காரிகை கற்கின்றது என்று கூறியவர் யார்?

5. பல்கலைக் குரிசில் பவணந்தி என்னும் புலவர் பெருமான் என்று கூறியவர் யார்?

6. களவியற் காரிகையின் காலம் யாது?

7. மாறனலங்காரம் நூலின் ஆசிரியர் யார்?

8. குமரகுருபர் பிறந்த ஊர் எது?

9. குட்டித் தொல்காப்பியம் என்பது யாது?

10. வைதநாத தேசிகர் என்றழைக்கப்படுபவர் யார்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடையளிக்க.

11. (அ) அகப்பொருள் இலக்கணம் பற்றி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பன்னிரு திணை அமைப்பு பற்றி விளக்குக.

12. (அ) யாப்பருங்கலத்தின் உரைச் சிறப்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) வச்சத் தொள்ளாயிரம் ஒரு தொகை நூல் என்பதை நிறுவுக.

13. (அ) பன்னிரு பாட்டியலின் நூல் அமைப்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) அகப்பொருள் விளக்க நூல் உரை குறித்து எழுதுக.

14. (அ) சிதம்பர பாட்டியலின் நூல் அமைப்பு மற்றும் நூல் இயல்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) மாறனகப் பொருள் இலக்கணச் சிறப்பினை எடுத்துரைக்க.

15. (அ) இலக்கணக் கொத்து நூலின் காலமும் சமயமும் குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) நேமிநாத நூலின், காலம், அமைப்புக் குறித்து எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழ்நெறி விளக்கம் இலக்கண நூலே நிறுவுக.

17. தண்டியலங்கார அணி அமைப்பு குறித்து விவரி.

18. நன்னூலின் அமைப்பும், பெருமையும் குறித்து எழுதுக.

19. பிரபந்த இலக்கணங்களை உறுதிப்படுத்துவதில் சிதம்பர பாட்டியலே சிறந்தது – நிறுவுக.

20. பிரபந்த தீபிகை நூல் குறிப்பிடும் பாட்டியல் இலக்கணங்களை விவரிக்க.

———————

**A–8522**

**Sub. Code**
**4SBS4A1**

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Fourth Semester**

**தமிழ்**

**தமிழிசைக் கலைகள்**

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

பின்வரும் வினாக்களுக்கு **ஓரிரு** சொற்களில் / தொடரில் விடை தருக.

1. திருவள்ளுவர் இசை என்பதற்குக் குறிப்பிடும் பொருள் யாது?
2. சந்தம் என்பது சொல்லகராதியில் எவ்வாறு குறிக்கப்படுகிறது?
3. சிலப்பதிகாரம் குறிப்பிடும் யாழ் உறுப்புக்களின் வகை எத்தனை?
4. பஞ்சமுக வாத்தியம் யாருடைய அம்சத்தினை ஒத்துள்ளது?
5. நாட்டுப்புறப் பாடலின் சிறப்புக்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
6. குறவன் குறத்தி ஆட்டத்தில் பக்க இசையாக இசைக்கப்படுவது எது?
7. இசை எழுத்து என்றால் என்ன?
8. பூர்வீக சங்கீத உண்மை என்னும் இசை நூலின் ஆசிரியர் யார்?
9. மதுரைப் பொற்றாமரைச் சித்திவிநாயகர் பதிகம் பாடியவர் யார்?
10. இசையை உலகறியச் செய்தவர் யார்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

பின்வரும் வினாக்களுக்கு **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) இசைகளுள் குழல், யாழ், கூத்து ஆகியவை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) சந்தத் திருப்புகழ் அமைப்பினை எடுத்துரைக்க.

12. (அ) குழல் இசையின் சிறப்பினை எழுதுக.

(அல்லது)

(ஆ) இசைக் கலைகளுள் பறையின் இசை நயம் குறித்து விளக்குக.

13. (அ) தமிழக நாட்டுப்புற பாடல்களின் இசை வகைப்பாடு பற்றி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தாலாட்டு, ஒப்பாரிப் பாடல்களின் இசைத் தன்மை குறித்து எழுதுக.

14. (அ) இசை எழுதும் பயிற்சி முறையினை விவரிக்க.

(அல்லது)

(ஆ) இசை அரங்கத்தின் மேளக்கட்டு குறித்து விளக்குக.

15. (அ) வடக்குப்பட்டு சுப்பிரமணியப் பிள்ளையின் பணிகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) வாசுதேவரின் கலைத் தொண்டினை எடுத்துரைக்க.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்குக் **கட்டுரை** வடிவில் விடை தருக.

16. திருக்குறளிள் இசையமைப்புக் குறித்து கட்டுரை வரைக.

17. தமிழிசைக் கலைகளுள் தோற்கருவிகளைப் படத்துடன் விவரிக்க.

18. இசைத் தமிழில் நாட்டுப்புற இசையின் பாங்கினைப் புலப்படுத்துக.

19. தமிழிசைக் கலைகளுள் பண்கள் பெறும் இடத்தினை ஆய்க.

20. வீணை மேதை பாலச்சந்தரின் இசைப் புலமையினை விவரிக்க.

———————

**A–8523**

| Sub. Code |
|---|
| 4BLT4S1 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Fourth Semester**

**தமிழ்**

**திருக்குறள் – இன்பத்துப்பால்**

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

பின்வரும் வினாக்களுக்கு **ஓரிரு** தொடர்களில் விடை தருக.

1. “காதலர் கண்ணே உள” – விளக்கம் தருக.
2. நெருஞ்சிப் பழம் போல வருத்தம் செய்வது எது?
3. மடல் அல்லது இல்லை வலி யார்க்கு கூறுக.
4. “களித் தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால்”– விளக்கம் தருக.
5. ‘அலர்’ என்றால் என்ன?
6. கனவினான் காதலர் காணாதவர் யார்?
7. தலைவி தன் நெஞ்சுக்கு கூறியவை யாவை?
8. தலைவன் வரவால் தலைவியின் மகிழ்வை எழுதுக.
9. தலைவி தம் வாழ்வில் உயர்வாக எண்ணுவது எது?
10. கூடுதல் எதற்கு இன்பம் – விளக்கு.

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒருபக்க** அளவில் விடை தருக.

11. (அ) தலைவியின் பார்வையினால் தலைவனுக்கு ஏற்படும் விளைவுகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) தலைவன் தரும் துன்பத்தையும் இன்பமாக எடுத்துக் கொள்ளும் தலைவியின் மனநிலையைப் புலப்படுத்துக.

12. (அ) தலைவனின் பிரிவால் தலைவியின் உடலில் ஏற்படும் மாற்றங்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) "பிரிவு ஆற்றாமை" யின் நிலையை விளக்குக.

13. (அ) பசலை நோயால் துன்புறுகின்ற தலைவியின் மனநிலையை வெளிப்படுத்துக.

(அல்லது)

(ஆ) "கனவு நிலை உரைத்தல்" அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள செய்தியை தருக.

14. (அ) தலைவியின் அடக்கம் எதனால் அழிகிறது என்பதை விவரி.

(அல்லது)

(ஆ) தலைவியின் காதல் துன்பத்தைத் தலைவன் எக்குறிப்புகளால் அறிந்து கொள்கிறான்?

15. (அ) புலவியை விரும்புகின்ற தலைவியின் மனஉணர்வுகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) தலைவி தன் மனதை எங்ஙனம் கடிந்து கொள்கிறாள்?

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் **கட்டுரை** வடிவில் விடை தருக.

16. காதலின் பெருமையைத் தலைவன் எங்ஙனம் எண்ணி மகிழ்கிறான்?

17. தலைவியின் உடல் மெலிவதற்கான காரணங்களை தொகுத்துரைக்க.

18. "பொழுதுகண்டு இரங்கல்" அதிகாரத்தில் தலைவியின் நிலையை விவரிக்க.

19. தலைவியின் 'உறுப்புநலன் அழிதல்' குறித்துக் கட்டுரை வரைக.

20. ஊடலின் தலைவன் தலைவி மகிழ்வை விளக்கி வரைக.

———————

| A–8525 |
|---|

| Sub. Code |
|---|
| 4BLT4C2 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Fourth Semester**

தமிழ்

தொல்காப்பியம் – எழுத்ததிகாரம்

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. சார்பு எழுத்துக்கள் யாவை?

2. இதழ் குவிந்து பிறக்கும் எழுத்துக்கள் யாவை?

3. சாரியை வருமிடம் எவை?

4. ‘அத்தின் அகரம் அகரமுனை இல்லை’ – விளக்குக.

5. புள்ளி இறுதி உகரம் பெறாத இடம் யாது?

6. ‘நும்’ என்ற மனர ஈற்றும் சொல் எவ்வாறு புணரும்?

7. ‘குயின்’ என்னும் சொல் எவ்வாறு முடியும்?

8. மெல்லெழுத்து மிகினும் குற்றமில்லை – விளக்குக?

9. ‘மரப்பெயர் கிளவிக்கு அம்மே சாரியை’ – விளக்குக?

10. ஆறு முன் ஆயிரம் எவ்வாறு முடியும்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கு **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) மொழி இறுதி எழுத்துக்களைச் சான்றுடன் விளக்குக?

(அல்லது)

(ஆ) எழுத்துக்களின் பிறப்புக் குறித்து விவரிக்க?

12. (அ) சொற்கள் புணரும் நிலையை விளக்குக?

(அல்லது)

(ஆ) மெல்லினம் தோன்றுமிடம் குறித்து விவரி?

13. (அ) வேற்றுமை உருபுகள் பெயரோடு சேரும்போது ஏற்படும் புணர்ச்சி விதிகள் சிலவற்றைக் கூறுக?

(அல்லது)

(ஆ) வல்லினம் தோன்றும் இடம் குறித்து விளக்குக?

14. (அ) 'எ' கர, 'ஏ' காரப் புணர்ச்சியை விளக்குக?

(அல்லது)

(ஆ) 'ன' கர ஈற்றுச் சொற்கள் புணரும் விதம் யாது?

15. (அ) குற்றியலுகரத்தின் தன்மைகளை விளக்குக?

(அல்லது)

(ஆ) எண்ணுப் பெயர்கள் முன் அளவு நிறைப் பெயர்கள் வரும் விதம் யாது?

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. 'மொழி மரபு' செய்திகளைத் தொகுத்துரைக்க.

17. உயிரீறுகளின் சிறப்பைச் சான்றுகளுடன் விவரிக்க.

18. தொல்காப்பியர் கூறும் உயிர் மயங்கியல் செய்திகளை விளக்குக?

19. மெய் ஈறுகள் வருமொழியோடு சேரும்போது ஏற்படும் மாற்றங்களை புள்ளி மயங்கியல் கொண்டு விளக்குக?

20. 'குற்றியலுகரப் புணர்ச்சி' குறித்துக் கட்டுரை வரைக?

**A–8526**

**Sub. Code**
**4BLT4C3**

**B.Lit DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Fourth Semester**

**தமிழ்**

**சிற்றிலக்கியம்**

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**பின்வரும்** வினாக்களுக்கு **ஓரிரு** சொற்களில் / தொடர்களில் விடை தருக.

1. நிலவைப் பழிக்கும் விதத்தைக் கூறு.
2. குறத்தியின் தோற்றம் யாது?
3. பிள்ளைத் தமிழ் இலக்கணம் யாது?
4. காரைக்குடி கொப்புடையம்மன் பிள்ளைத் தமிழின் ஆசிரியர் யார்?
5. பிரணவமாய் விளங்குபவள் யார்?
6. அபிராமி தாயின் வடிவம் யாது?
7. சங்கினம் உலவிக் கொண்டிருக்கும் ஊர் எது?
8. 'குடும்பன்' என்று அழைக்கப்படுபவன் யார்?
9. பள்ளனின் காவல் நிலை எத்தகையது?
10. முக்கூடல் அழகர் சிறப்பு யாது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**பின்வரும்** வினாக்களுக்கு **ஒரு** பக்க அளவில் விடை தருக.

11. (அ) நாட்டுவளம் குறித்து குற்றாலக்குறவஞ்சி வழி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) குறத்தியின் தோற்றத்தினை விவரிக்க.

12. (அ) கொப்புடையம்மனின் முத்தப் பருவம் குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) ஊசல் பருவத்தில் இடம்பெறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

13. (அ) அபிராமியின் இயல்பினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) அபிராமியின் தோற்றத்தினை அபிராமி பட்டர் வழி புலப்படுத்துக.

14. (அ) மூக்கூடற் பள்ளி வரவு குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) முல்லையில் வந்த வெள்ளம் பற்றி எடுத்துரைக்க.

15. (அ) பள்ளனை விடுவித்த விதம் குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) பள்ளியர் ஏசலில் இடம்பெறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

பகுதி இ (3 × 10 = 30)

**பின்வரும்** வினாக்ககளில் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் விடை தருக.

16. வசந்த வல்லியின் இயல்பினைக் கட்டுரைக்க.

17. கொப்புடையம்மனின் பிள்ளை பருவ இயல்புகளை விவரி.

18. அபிராமியை பட்டர் அழைத்த விதத்தினை விரித்துரைக்க.

19. மூத்த பள்ளி முறையிடு குறித்து விவரி.

20. உழவின் சிறப்பினை முக்கூடற் பள்ளு வழிப் புலப்படுத்துக.

**A–8528**

| Sub. Code |
| --- |
| 4BLT5C1 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Fifth Semester**

**தமிழ்**

**சங்க இலக்கியம் – அகம்**

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours                    Maximum : 75 Marks

**பகுதி அ**                    (10 × 2 = 20)

பின்வரும் வினாக்களுக்கு **ஓரிரு தொடர்களில்** விடையளி.

1. பாலை நிலத்தின் தன்மை எத்தகையது?
2. கலித்தொகையின் மொத்த பாடல்களின் எண்ணிக்கை யாது?
3. நற்றிணையைத் தொகுப்பித்தவர் யார்?
4. வன்புறை என்றால் என்ன?
5. "வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதல்" - விளக்கம்.
6. அறத்தொடு நிற்றல் என்றால் என்ன?
7. அகநானூற்று மருதத் திணைப் பாடல்கள் எத்தனை?
8. புனலாடுதல் பற்றி கூறுக.
9. வெள்ளாங்குருகு என்பது யாது?
10. இருங்கழித் துவலை ஒலி பற்றி கூறுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை எழுதுக.

11. (அ) தலைவன் பொருள் தேடச் செல்வதைக் கைவிட்டதன் காரணத்தைக் கூறுக.

(அல்லது)

(ஆ) 'பிரிந்தால் இறப்பாள்' எனத் தோழி கூறியதற்கானக் காரணங்களை எடுத்துரைக்க.

12. (அ) பிரிவு உணர்த்திய தோழிக்குத் தலைமகள் கூறியதை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'வன்புறை எதிரழிந்தது' எனக் தலைவியிடம் தோழி கூறியதைப் புலப்படுத்துக.

13. (அ) உணர்ப்பு வலியின் வாரா ஊடற்கண் தலைமகள் சொல்லியதைக் கூறுக.

(அல்லது)

(ஆ) தோழி இரவுக் குறிக்கண் சிறைப்புறமாகக் காப்பு மிகுதியினைச் சொல்லியதை விளக்குக.

14. (அ) ஐயை, தித்தன் ஆகிய வள்ளல்கள் குறித்துக் குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) ஊடல் எத்தன்மையில் தீர்ந்தது என வினவியத் தோழிக்குத் தலைவி உரைத்த செய்திகளை விளக்குக.

15. (அ) 'பாவை ஈன்றெனன்' - விளக்குக.

(அல்லது)

(ஆ) தலைமகள் தலைவனுக்கு வாயில் மறுத்த நிகழ்வினை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

பின்வரும் வினாக்களுள் **மூன்றனுக்குக் கட்டுரை** வடிவில் விடை தருக.

16. பொருட்காரணமாய் பிரியும் பிரிவு குறித்துப் 'பாலைக்கலி' வழிநின்று விளக்குக.

17. தோழியின் இயல்புகளை நற்றிணைப் பாடல்களின் வழி விளக்குக.

18. தலைவன், தலைவி மீது கொண்ட அன்பினைக் குறுந்தொகைப் பாடலின் மூலம் புலப்படுத்துக.

19. அகநானூறு சுட்டும் மருதத் திணையின் சிறப்புகளை விளக்குக.

20. சிறுவெண் காக்கைப் பத்தில் இடம் பெற்றுள்ள செய்திகளை விவரிக்க.

**A–8529**

**Sub. Code**
**4BLT5C2**

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Fifth Semester**

தமிழ்

தொல்காப்பியம் – சொல்லதிகாரம்

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு சொற்களில்/தொடரில் விடை தருக.

1. உயர்திணையைக் குறிக்கும் மூன்று பால்கள் யாவை?

2. ‘பேடி’ என்ற சொல் அமையும் வகை யாது?

3. ஐ வேற்றுமை ஏதுப்பொளில் மூன்றும் ஐந்துமாகும் எவ்வாறு?

4. முறைப் பெயர்க் கிளவி எதனோடு வரும்? சான்று தருக.

5. ‘கள்’ விகுதி பெறும் அஃறிணைச் சொற்கள் யாவை?

6. வினை என்றால் என்ன?

7. இடைச்சொல்லின் இயல்பு யாது?

8. ‘மிகுதி’ என்னும் பொருள் தரும் உரிச்சொல் யாவை?

9. வடசொல் இரண்டினைக் குறிப்பிடுக?

10. தொல்காப்பியர் கூறும் பொருள்கோள்கள் யாவை?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) திணை, பால் – இவற்றைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) 'இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்து இசையா' – விளக்குக.

12. (அ) வேற்றுமை வகைகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) இரண்டும் ஏழும் சார்புப் பொருளில் வரும் விதம் யாது?

13. (அ) அஃறிணைப் பெயர்களைத் தொகுத்துரைக்க?

(அல்லது)

(ஆ) வினைச் சொல்லின் பொது இலக்கணம் தருக?

14. (அ) மன், தில், கொல் என்னும் இடைச் சொற்கள் எப்பொருளில் வரும்?

(அல்லது)

(ஆ) 'கடி' உரிச்சொல் பொருள் உணர்த்தும் விதம் யாது?

15. (அ) தொகைச் சொல் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) உம்மை எச்சமும் காலமயக்கமும் குறித்து தொல்காப்பியர் கூறுவன யாது?

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கும் மட்டும் விரிவான விடை தருக.

16. தொல்காப்பியர் சொற்களை எவ்வாறு பயன் கொள்ள வேண்டும் என்கிறார். கிளவியாக்கம் கொண்டு விளக்குக.

17. விளிமரபு செய்திகளைத் தொகுத்துரைக்க.

18. உயர்திணைப் பெயர்கள், அஃறிணைப் பெயர்களைச் சான்றுடன் விளக்குக.

19. உரிச்சொல் குறித்து தொல்காப்பியர் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

20. தொகை மொழிகள் குறித்துக் கட்டுரை தருக.

**A–8530**

| Sub. Code |
|---|
| 4BLT5C3 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Fifth Semester**

**தமிழ்**

**தமிழ் இலக்கிய வரலாறு**

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. தமிழ் மொழியின் இலக்கண வளம் எச்சிறப்புடையது?

2. நற்றிணையின் மரபுக் குறிப்பு யாது?

3. நகரத் தொன்மங்கள் என்பது யாது?

4. பாஞ்சாலி சபதத்தின் பகுப்பு முறை எத்தகையது?

5. சிவதத்துவம் எத்தனை தத்துவங்களைக் கொண்டது?

6. பைபிளை தமிழில் முதன் முதலில் மொழிப் பெயர்த்தவர் யார்?

7. இசுலாமியச் சமய இலக்கியங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

8. முகியித்தீன் புராணத்தை இயற்றியவர் யார்?

9. இணைமணிமாலை என்பது யாது?

10. பயண இலக்கியங்களாக சங்க இலக்கியத்தில் எவற்றையெல்லாம் குறிப்பிடலாம்.

பகுதி ஆ (5 × 5 = 25)

**பின்வரும்** வினாக்களுக்கும் விடையளி.

11. (அ) தொல்காப்பியர் குறிப்பிடும் இலக்கிய வகைமைகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஆற்றுப்படை நூல்கள் கூறும் கருத்துக்களை தொகுத்துரைக்க.

12. (அ) கம்பராமாயணத்தில் நாடகப் பாங்கு அமைந்த விதத்தை எழுதுக.

(அல்லது)

(ஆ) வசுசரித்திரத்தின் உள்ளடக்கத்தினை தொகுத்து எழுதுக.

13. (அ) குணங்குடியாரின் பாடல்களின் சைவ சித்தாந்தக் கோட்பாட்டைத் தொகத்துரைக்க.

(அல்லது)

(ஆ) உரையாசிரியர்களின் சிறப்பினை விரிந்துரைக்க.

14. (அ) இசைத்தமிழ் நூல்களின் தன்மையைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) 19ம் நூற்றாண்டின் சிறுகதை எழுத்தாளர்கள் பற்றி எடுத்துரைக்க.

15. (அ) வரலாற்று இலக்கியம் பற்றித் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மொழிப்பெயர்ப்பின் வகைகளை விரித்தெழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

**பின்வரும்** வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஐஞ்சிறு காப்பியத்தின் மரபுக்குறிப்பைக் கட்டுரை வடிவில் எழுதுக.

17. பௌத்த பக்தி இலக்கியங்கள் உணர்த்தும் கருவை தொகுத்துரைக்க.

18. மருமக்கள் வழி மான்மியத்தின் உள்ளடகத்தை விவரி.

19. புதுகவிதையின் தோற்றம் வளர்ச்சி குறித்துக் கட்டுரைக்க.

20. திறனாய் வாளருக்குரிய பண்புகளை கட்டுரை வடிவில் எழுதுக.

———————

| A–8531 |
|---|

| Sub. Code |
|---|
| 4BLTE1A |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Fifth Semester**

தமிழ்

விருப்பப் பாடம் – மொழி பெயர்ப்பியல்

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு** தொடரில் விடை தருக.

1. ஐ.ச. டோர் பிஞ்சக் அவர்களின் வரைவிலக்கணம் யாது?

2. பாரதி மனித சமுதாய முன்னேற்றத்திற்கு எது இன்றியமையாதது என்கிறார்?

3. கவிமணி தமிழில் மொழிபெயர்த்த நூல் எது?

4. மொழிபெயர்ப்பின் பயன் யாது?

5. "Health is Wealth" என்பதற்கு இணையான தமிழ் பழமொழியை எழுதுக.

6. ஒரே பொருட்களத்தில் அமைந்த சொற்களை அவற்றின் பொருள் வருமாறு இரண்டு சான்று தருக?

7. இரு என்ற துணை வினை இறந்த காலத்தில் எவ்வாறு வரும்?

8. ஒலிபெயர்ப்பு என்றால் என்ன?

9. ஆங்கிலத்தில் துணை வினைகளாக வரக்கூடிய சொற்களை எழுதுக?

10. "Blood is thicker than Water" என்பதற்குத் தமிழ் பழமொழியை எழுதுக?

பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் **ஒருபக்க** அளவில் விடை தருக.

11. (அ) மொழிபெயர்ப்பின் இன்றியமையாமைக் குறித்து எழுதுக?

(அல்லது)

(ஆ) கணிப்பொறி மொழிபெயர்ப்பு குறித்து எழுதுக?

12. (அ) மொழிபெயர்ப்புக்கு அறிஞர்கள் கூறும் வரைவிலக்கணம் யாது?

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்பின் வகைகளை எழுதுக?

13. (அ) அறிவியல் மொழிபெயர்ப்பாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவை யாவை?

(அல்லது)

(ஆ) இலக்கிய மொழிபெயர்ப்பு குறித்து எழுதுக?

14. (அ) விளம்பர மொழிபெயர்ப்புப் பற்றி எழுதுக?

(அல்லது)

(ஆ) ஆற்றல் மிகு நிகரன்கள் என்றால் என்ன? விளக்குக?

15. (அ) ‘காலம்’ குறித்தத் தொடர்கள் பற்றிச் சான்றுகளுடன் எழுதுக?

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்பாளரின் இடையீடு பற்றிச் சான்றுடன் விளக்குக?

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. காலந்தோறும் மொழிபெயர்ப்பின் வளர்ச்சி நிலைகளைத் தொகுத்துரைக்க?

17. ஒலிபெயர்ப்பின் முக்கியத்துவத்தை விவரித்து எழுதுக?

18. சேக்ஸ்பியர் நாடகத்தை தமிழில் மொழிபெயர்த்துள்ளதை நும் பாடப்பகுதி கொண்டு விளக்கி எழுதுக?

19. தொடர் வினைகளைச் சான்றுடன் விளக்குக.

20. தமிழில் மொழிபெயர்க்க.

    One day a dog took a piece of meat in his Mouth. He was crossing a plank over a stream. As he walked along he looked into the water. There he saw his image. He thought this was another dog carrying a piece of meat. He felt he would like to have both the pieces, his own and the other dog's. He Snapped at the shadow in the water. As he opened his Mouth the piece of meat dropped into the stream. He did not gain anything. He lost what he already had.

———————

WS8

A–8532

Sub. Code
4BLTE2B

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Fifth Semester**

தமிழ்

விருப்பப்பாடம் – பெண்ணியம்

(CBCS – 2014 onwards

Time : Three Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

பின்வரும் **அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு** சொற்களில் விடையளி.

1. பெண்ணியம் என்றால் என்ன?
2. கலிபோர்னியாவில் பெண்களுக்கு எந்த ஆண்டு வாக்குரிமை அளிக்கப்பட்டது?
3. கைம்மை நிலை குறித்தெழுதுக?
4. ஆரிய சமாஜம் பற்றி விளக்குக.
5. "பெண்ணியத் திறனாய்வு" விளக்கம் தருக?
6. பெண்ணிய நோக்கு கொண்ட பாஸந்தியின் இருநாவல்களை குறிப்பிடுக?
7. மாறுபாட்டு அணுகுமுறை என்றால் என்ன?
8. பின் நவீனத்துவம் என்றால் என்ன?
9. தமிழ்நாட்டில் பெண்ணிய அரங்க குழுக்கள் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக.
10. முதல் பெண்ணிய அரங்க விழா எங்கு ஏற்படுத்தப்பட்டது?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒருபக்க** அளவில் விடை தருக.

11. (அ) பெண்ணிய வாதிகள் பற்றி எடுத்துரைக்க.?

(அல்லது)

(ஆ) பெண்களின் வாக்குரிமை குறித்து விவரி?

12. (அ) இந்திய பெண்களின் சமூக நிலை குறித்துக் கருத்துரைக்க?

(அல்லது)

(ஆ) உடன்கட்டை ஏறுதல் பற்றி விவரிக்க?

13. (அ) தூய பெண்ணியம் – விளக்குக?

(அல்லது)

(ஆ) தமிழ் இதழ்களில் பெண் சித்தரிப்புப் பற்றி விளக்குக.

14. (அ) பெண்ணுக்குரிய துணைப் பண்பாடு குறித்து எழுதுக.?

(அல்லது)

(ஆ) மார்க்சியப் பெண்ணியம் பற்றி எழுதுக?

15. (அ) அகப்புறப் பாகுபாடு பற்றி விளக்குக?

(அல்லது)

(ஆ) பெண்ணிய அரங்குகளின் வளர்ச்சி குறித்து எழுதுக?

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கும் கட்டுரை வடிவில் விடை தருக.

16. மேலை நாடுகளில் பெண்ணியம் தோற்றம், வளர்ச்சி பற்றிக் கட்டுரைக்க.

17. இந்தியப் பெண்களின் வாழ்க்கையில் இழைக்கப்பட்ட கொடுமைகளை விவரி.

18. பெண்ணிய வகைகள் குறித்துக் கட்டுரைக்க?

19. பெண்ணடிமைக் கருத்துருவம் பற்றி விவரி?

20. பெண்ணியமும் தலித்தியமும் எனும் தலைப்பில் கட்டுரைக்க.

---

| A–8534 |
|---|

| Sub. Code |
|---|
| 4SBS5A2 |

**B.Lit. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Fifth Semester**

**தமிழ்**

**நாடகக் கலை**

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு தொடரில் விடையளி.

1. தெருக்கூத்தால் அறிவது யாது?

2. சாந்திக் கூத்தின் வகைகள் யாவை?

3. நாடகக் குழு என்றால் என்ன?

4. கதகளி – விளக்கம் தருக.

5. சங்கரதாஸ் சுவாமிகள் – குறிப்புத் தருக.

6. நாடக வகைகளில் இரண்டினைக் குறிப்பிடுக.

7. அணிகலன்கள் நாடகத்திற்குத் தரும் பங்கு யாது?

8. ஒப்பனைப் பொருட்களைப் பயன்படுத்தும் முறை யாது?

9. கீர்த்தனை நாடகம் – விளக்கம் தருக.

10. 'வானொலி நாடகம்' குறிப்பு வரைக.

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளி.

11. (அ) நாடகம், நாட்டியம், கூத்து – விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) இசைக் குழுவினர் குறித்து விளக்குக.

12. (அ) தெருக்கூத்தின் மறைவிற்குக் காரணம் என்ன?

(அல்லது)

(ஆ) நாட்டுப்புற நாடகம் வளர்ந்த விதம் யாது?

13. (அ) நாடக அங்கதம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியர் கால நாடக வழக்குக் குறித்து எழுதுக.

14. (அ) பள்ளு, குறவஞ்சி நாடகங்களின் அமைப்பு முறை யாது?

(அல்லது)

(ஆ) நாடக வளர்ச்சிக்குப் பணி செய்த நாடக ஆசிரியர்கள் குறித்து எழுதுக.

15. (அ) இன்பவியல் நாடக அமைப்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) வானொலி, தொலைக்காட்சி நாடகங்களுக்குள்ள ஒற்றுமைகள், வேற்றுமைகள் யாவை?

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் <u>கட்டுரை</u> வடிவில் விடை தருக.

16. நாடகக் கலையின் தோற்றம் வளர்ச்சி குறித்துக் கட்டுரை வரைக.

17. இசை நாடகப் பண்புகளைக் கீர்த்தனை நாடகங்கள் கொண்டு விளக்குக.

18. சமண, பௌத்த சமய நாடகங்கள் குறித்து விவரிக்க.

19. புராண, புராண மறுப்பு நாடகங்கள் பெறுமிடத்தை ஆராய்க.

20. மேடை நாடகங்கள் தமிழ் நாடக வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டுகள் யாவை?